**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி.**

**O.S No.77/2011** **Date:21.08.2024**

**(P.W–1)**

திரு. பேச்சியம்மாள் க/பெ. ராஜி

**6 முதல் 10 மற்றும் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**:

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1) நான் மாராவலையனின் மகள் என்றால் சரிதான். என் உடன் பிறந்தவர்கள் முத்துசாமி, சுப்பிரமணி ஆகியோர்கள் என்றால் சரிதான். சுப்பிரமணி மற்றும் முத்துசாமியை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் பகுதி சொத்து என் தகப்பனார் வாங்கியது என்றும், பகுதி சொத்து எனது தாத்தா தவசிவலையனுக்கு பாத்தியம் என்றால் எல்லாம் பொது சொத்து தவசிவலையனுடையது ஆகும். எனது இரண்டு சகோதரர் 13.07.1989–ல் ஒரு பதிவு செய்த பாகபிரிவினை பத்திரத்தை தவசிவலையனின் ஏனைய வாரிசுகளுடன் ஏற்படுத்தியுள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் என்னை சேர்க்கவில்லை. பாகப்பிரிவினை பத்திரத்தில் ஏ அட்டவணை அவநாசிவலையன் மற்றும் அய்யம்மாளுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அய்யம்மாள் அவிநாசியலையனின் வாரிசுகள் 6 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் என்றால் சரிதான்.

2) பாகப்பிரிவினை பத்திரத்தில் டி அட்டவணை சொத்து என் சகோதரர் சுப்பிரமணிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு படிப்பு அறிவு இல்லை. என் மற்றொரு சகோதரர் முத்துசாமிக்கு இ அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விட்டல்ராஜன் ஆடிடர் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என் சகோதரர்களிடம் காடு வாங்கியுள்ளார். 26.07.1996ம் தேதிய கிரைய ஆவணப்படி எனது சகோதரர் முத்துசாமி, அவர் மைனர் மகன் மோகனசுந்திரம் பேச்சியம்மாள் ஆகிய நான் ஆகியோர் சேர்ந்து 1989ம் பாகப்பிரிவினை பத்திரப்படி முத்துசாமிக்கு ஒதுக்கிய டி அட்டவணை சொத்தை கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் முத்துசாமிக்கு

மட்டும் தான் கிரையம் கொடுத்தேன். நான் முத்துசாமிக்காக மட்டும் தான் கிரையம் கொடுத்தேன். எனது சகோதரர் சுப்பிரமணிக்காக கிரையம் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

3) 06.08.1996 மாராவலையன் மகன் சுப்பிரமணிக்கு 1989 ம் பாகபிரிவினைப்படி ஒதுக்கிய சொத்துக்களை எனக்கு உள்ள உரிமையை பதிவு செய்த விடுதலை ஆவணம் சுப்பிரமணிக்கு எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் எனக்கு படிக்க தெரியாது. கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் கேட்கவில்லை. 6 முதல் 9 பிரதிவாதிகள் தன்னுடைய எதிர்வழக்குரையுடன் நான் என்னுடைய சகோதரர் சுப்பிரமணிக்கு எழுதிக்கொடுத்த விடுதலை ஆவணமும் மற்றும் முத்துசாமியும், நானும் விட்டல்ராஜ்க்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணமும் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விட்டல்ராஜை நான் வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் மாராவலையனின் பங்கை எனது சகோதரர் விற்பனை செய்த போது நானும் சேர்ந்து விற்றுவிட்டு ஏணைய மாராவலையனின் சகோதரர்கள் பங்கு மீது நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்காது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் முன்னிலையில் சில ஆவணங்களை எழுதிக்கொடுத்ததை மறைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், நீதிமன்ற கட்டணம் குறைவாக செலுத்தியுள்ளேன் என்றும், இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் என் முன்னிலையில் அவரது கூற்றுப்படி தட்டச்சு செய்யப்பட்டு, அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரி என ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2024.08.21 19:20:19 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.